# "மெய்யான இந்துமதம் ஈன்றெடுத்த தொழுகை முறை பற்றிய விளக்கம்"



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

ஆடி மாத வெளியீடு (July 2015 - Aug 2015)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116

காணிக்கை ரூ.10/-

தமிழ் மொழியின் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி

# உள்ளுறை

1. திராவிட இயக்கம் என்றால் திராவிடர் கழகமல்ல!?!?!?

2. தமிழ் எழுத்தின் வரிவடிவங்கள்.

3. அருளுலகின் அகற்றவியலாக் காரிருள்.

4. எல்லாக் கடவுள்களும் தாடி, மீசை, முடி உடையவர்களே.

5. சனீசுவரக் காயந்திரி மந்தரம், தோத்தரம். (ஒன்பது கோள்களின் நாயகன் வழிபாடு)

6. உண்மையான இந்துமதம் ஈன்றெடுத்த தொழுகை முறைகள்.

7. ஓதுதலும் ஓதுவித்தலும் - தொழுகை முறை விளக்கம்.

8. குருபாரம்பரிய வாசகங்கள்.

மணிசர்கள் அருள் அணுக்களைத் தங்களுக்குள் கருவாக்கி உருவாக்கிடும் பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகள் முறையாகவும், நிறையாகவும் வகுக்கப்பட்ட மதமே **இந்து மதம்**. இம்மண்ணுலகோடு நிலையாக **இந்துமதச் செயலகங்கள்** என்றென்றும் இருக்கும் வண்ணமே ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், இருநூற்று நாற்பத்துமூன்று சத்தி பீடங்களும், நூற்றெட்டுத் திருப்பதிகளும், தொண்ணூற்றாறு வகை வழிபடு நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றின் திருவாக இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், தேவர், தேவதை, அமரர், இருடி, ... கணபாடிகள் எனப்படும் நாற்பத்தெட்டு வகையினர் தோன்றி வளர்ந்து வாழ்ந்திடும் வழிவகைகள் அனைத்தும் மிக மிகத் தெளிவாக வகுத்தளிக்கப் பட்டிருக்கின்றன பதினெண்சித்தர்களால்.

**//உண்மை நகல்//**

சென்னை-11
1.3.1986

# திராவிட இயக்கம் என்றால் திராவிடர் கழகமல்ல!?!?!?

1) திராவிட இயக்கம் என்றால் இன்றைய மக்களுக்கு நாத்திக வாதமும், மதமறுப்பும், கடவுள் வெறுப்பும், ஆன்மீகவாதிகளுக்கு எதிர்ப்பும், புராண இதிகாசங்களுக்கு இழிவும், அருளுலகுக்குப் பழியும், அருளாளர்களிடத்தில் பகையும், பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் சிறுமையும், சமுதாயக் கட்டுக்கோப்புக்களுக்கும் மரபுகளுக்கும் நடைமுறைகளுக்கும் சிதைவும்; ... வழங்குகின்ற இயக்கம் என்ற **ஒரு தவறான எண்ணம்** இன்றைய பொதுமக்களிடம் வளர்ந்திருக்கிறது, வளர்ந்து வருகிறது. இது தவறு! தவறு!! தவறு!!! இதுபற்றி உடனடியாக தமிழ்ப் புலவர்கள் அனைவரும், சமுதாய நலத் தொண்டர்கள் அனைவரும், மெய்யான சமயவாதிகள் அனைவரும், நேர்மையான அரசியல்வாதிகள் அனைவரும் கட்டாயமாகத் தேவையான விளக்கங்களை வழங்கியேயாக வேண்டும்! வழங்கியேயாக வேண்டும்! வழங்கியேயாக வேண்டும்!

2) இன்றுள்ள திராவிடர் கழகத்தின் கண்மூடித்தனமான, வெறித்தனமான, எள்முனையளவு கூட பயனற்ற சொற்களாலும், செயல்களாலும்தான் மேற்கூறிய மாயை, மயக்கம், தவறு விளைந்திருக்கிறது, விளைந்து வருகிறது. எனவேதான் அண்மையில் தமிழர் நலம் பேணத் தள்ளாத வயதிலும் தளர்ச்சியே யின்றிக் கிராமம் கிராமமாகச் சுற்றியலைந்து திரிந்து பகுத்தறிவுப் பணியாற்றிய தமிழினத் தலைவர், சிந்தனைச் சிற்பி, சிறைக்கஞ்சாச் சிங்கம், சுயமரியாதை இயக்கம் கண்ட மாவீரர், போராட்ட உணர்வின்

**ஊற்று, பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தன், தன்னலம் பேணாத தலைவன், தமிழ்மொழி உரிமைக்காகப் போராடிய தமிழ்மொழிக் காவலர், அறியாமை இருளகற்றிய அறிவுப் பெருஞ்சுடர், மெய்யான தமிழர்களின் அறிவுத் தந்தை, அருளுலக இருளெல்லாம் அகற்ற சிந்தனைச் சுடர் பரப்பிய 64வது நாயனார் 'சொல்லடி நாயனார்' இந்துமத மறுமலர்ச்சிக்காக ஈவு இரக்கமற்று மிகக் கடுமையான கருத்துக்களை வழங்கிய கடமை வீரர், திராவிடர் இயக்கங்களின் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.** அவர்கள் மறைந்த பிறகுதான் 'திராவிடர் இயக்கங்கள்' அனைத்துமே பகுத்தறிவின் பெயரால் கடுமையான, கண்மூடித்தனமான, அருவெறுக்கத் தக்க, பிறரை புண்படுத்தக் கூடிய, அநாகரீகமான நாத்திக வாதத்தில் இறங்கி யுள்ளன.

3) தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் '**சுயமரியாதை இயக்கம்**' என்ற இயக்கத்தின் பெயரால் பிரும்மணர் அல்லாதார் (Non-Brahmins) உரிமை, பெருமை, கல்வி, அரசாங்க அலுவல், தன்மானம், தன்னம்பிக்கை, ஒற்றுமை, சமய சமுதாய அரசியல் அறிவு, ... முதலியவைகளின் விழிச்சிக்காகவும், எழுச்சிக்காகவும், செழிச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும், வலிமைமிகு ஆட்சிக்காகவும் போராடினார்! போராடினார்! போராடினார்! எனவேதான், உலகம் முழுவதும் உள்ள பிரும்மணர்கள் இதற்கு எதிரிகளாகவும், விரோதிகளாகவும், பகைவர்களாகவும் செயல்பட ஒன்று திரண்டிட்டார்கள். அப்படி, அவர்களை ஒன்று திரட்டுவதற்கு *ஹிந்துமதம்* (**பதினெண்சித்தர்களின் இந்துமதமல்ல**; வடஆரிய வேதநெறியின் அடிப்படையிலுள்ள சனாதன தர்மமான சமசுகிருத மொழியை ஆட்சிமொழியாகப் பெற்றிட்ட *ஹிந்துமதம்*) பேருதவி புரிந்தது.

மேலும் இந்த *ஹிந்து மதத்தின்* புகழ்வாய்ந்த ஆச்சாரியார்களும், மடாதிபதிகளும், சன்னிதானங்களும், குருபீடங்களும், மதத்

தலைவர்களும், புரோகிதர்களும் (சாத்திரிகள்), கோயில் அர்ச்சகர்களும் (பூசாரிகளும், குருக்கள்களும், குருமார்களும்), ... சிலந்தி வலை பின்னுவது போல் **பிரும்மண ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்கினார்கள்.** (The priestly community of the Brahminical Hinduism played the main role in cultivating or creating the unity and uniformity of the Sanskritised Brahmins. Since then Mr E.V.R. got wild and enraged against the Hinduism and priestly community. So, then he became a fanatic of the Atheism and hater of the religious men and missionaries.... ***- taken from the writings of His Holiness Siddhar Kaakkiyar Mr M.Palanisamy Pillai.***)

எனவேதான், பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பிரும்மண ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் பாடுபட்ட *ஹிந்துமதத்* தலைவர்களான சமசுக்கிருத வெறி பிடித்த பிரும்மணர்கள் மீதும், *ஹிந்துமத* நிறுவன நிர்வாகங்கள் மீதும் கடுமையான வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும், பகையும் கொண்டிட்டார். அதனால், அவர் 1947க்குப் பிறகு அல்லது 1949இல் திராவிடர் கழகத்துக்குள் மிதவாதத்தினர் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் பிரும்மணர்களுக்கும், *ஹிந்து மதத்*தினருக்கும் ஆதரவு கொடுக்க ஆரம்பித்த பிறகு பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் *ஹிந்துமத*த்தையும் அதன் கடவுள்களையும், புராண இதிகாசங்களையும் கடுமையாகத் தாக்கி விமரிசித்து பிரும்மணர் எதிர்ப்பு இயக்கத்தை வலிமைப் படுத்தினார். (“Mr E.V.R. has thoroughly changed the trends and the attitudes of the Self-Respect Movement into a fanatic ‘Anti-Brahmin Movement’. So, he began his drastic attack over the Brahmins, the Hindu gods and goddesses, the Hindu Religious literatures...” ***- taken from the writings of His Holiness Siddhar Kaakkiyar Mr M.Palanisamy Pillai.***)

எனவே, திராவிட இயக்கங்கள் அனைத்துக்கும் தந்தையாக, தலைவராக, வழிகாட்டியாக விளங்குகின்ற பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 1950க்குப் பிறகு "பிருமணர் அல்லாதார்களைப் (The Non-Brahmins) பாதுகாக்க வேண்டுமென்றால் அவர்களை *ஹிந்துமத*த்திடமிருந்தும், பிருமணர்களின் அண்டப்புளுகுகளும், ஆபாசக் கற்பனைகளும், சுரண்டல்மிகு சூழ்ச்சிகளும் நிறைந்த புராண இதிகாசங்களிடமிருந்தும் பிருமணர் அல்லாதவர்களுக்கு விடுதலை பெற்றுத் தர வேண்டும், அதுவே எனது முதல்வேலை! அதுவே எனது கடமை! அதுவே எனது கொள்கை!..." என்று கூற ஆரம்பித்து விட்டார்.

இவருடைய இந்தப் போக்கினால்தான் சுயமரியாதை இயக்கப் பாரம்பரியத் தத்துவத்திலும், பண்பாட்டிலும் கலக்கம், குழப்பம், மயக்கம் முதலியவை ஏற்பட்டன. அதன் விளைவே திராவிடர் இயக்கங்கள் அனைத்தும் கண்மூடித்தனமான, அநாகரீகமான நாத்திக வெறிப் போக்கைப் பெற்று பிருமணர் அல்லாதார்களின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்க முடியாமல் போய்விட்டன. அதாவது, பொதுமக்களின் செல்வாக்கை இழந்து விட்டன.

4) மேற்படி, வரலாற்றுப் பேருண்மைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாதவர்களும், குறிப்பிட்ட அளவாவது புரிந்து கொள்ள முடியாதவர்களும், இன்றைய சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய கல்வித் துறைகளில் மிகுதியாக இருக்கின்றார்கள்! இருக்கின்றார்கள்! இருக்கின்றார்கள்!

எனவேதான் 1) மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, 2) சர் பி.தியாகராயச் செட்டியார், 3) T.M.நாயர், 4) பனகல் அரசர், 5) சர் P.T.ராசன், 6) செட்டிநாட்டரசர் முத்தையாச் செட்டியார், 7) சுவாமி கைவல்யம், 8) மறைமலை அடிகள், 9) திரு வி.க., 10) தாத்தாச் சாமியார், 11) மௌனகுரு, 12) திருவையாறு நிர்வாண

அடிகள், 13) வெட்டவெளிச் சித்தர், 14) கடலூர் ஞானியார் சாமிகள், 15) குன்றக்குடி அடிகளார், 16) திருநெல்வேலி சந்திர சேகரப் பாவலர், ... முதலிய எண்ணற்ற ஆன்மீகவாதிகள், அருளாளர்கள், மதத் தலைவர்கள், மதவாதிகள், ... தோற்றுவித்த **திராவிட இயக்க உணர்வு அல்லது பிருமணர் அல்லாதாரின் ஒற்றுமையுணர்வு உருவாக்கிய மதமறுமலர்ச்சிச் செயல்கள்தான் சுயமரியாதை இயக்கத்தையும், நீதிக் கட்சியையும் வளர்த்தன! வளர்த்தன! வளர்த்தன!** ("The Religious Renaissance attempts are the main source for the development of 'The Justice Party' and 'The Self-Respect Movement' ..." *- taken from the writings of His Holiness Siddhar Kaakkiyar Mr M.Palanisamy Pillai.*)

அதாவது மேலே குறிப்பிட்ட எண்ணற்ற தலைவர்களின் கூட்டு முயற்சிகளின் முழுவடிவமாகவும், தலைவராகவும் **திராவிட இயக்கங்களின் தந்தை** எனப்படும் தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் திகழ்ந்தார். எனவே, **திராவிட இயக்கங்களின் அடிப்படையும், பாரம்பரியமும், பண்பாடும், வரலாறும், வளர்ச்சியியலும், வலிமையும், பொலிவும் நாத்திகமல்ல! நாத்திகமல்ல! நாத்திகமல்ல!; கடவுள் வெறுப்பல்ல! கடவுள் வெறுப்பல்ல! கடவுள் வெறுப்பல்ல!; மதமறுப்பல்ல! மதமறுப்பல்ல! மதமறுப்பல்ல!**

**குவலய குருபீடம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**3/3/86**

***//உண்மை நகல்//***

***//இதன் மூலநகல்: அப்போதைய தலைமைப் பீடச் சித்தரடியார் இளந்துறவி சுந்தரானந்தா அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//***

# <u>தமிழ் எழுத்தின் வரி வடிவங்கள்</u>

தமிழ் எழுத்தின் வரி வடிவங்கள் காலப்போக்கில் பல மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன. ஆனால், இன்றுள்ள எழுத்துக்களின் 'அடிப்படை வடிவங்கள்' அல்லது 'மூல வடிவங்கள்' ...... அப்படியேதான் இருக்கின்றன. அவை, **அருளை ஊற்றெடுக்கச் செய்யும் சக்கரங்களே**யாகும். (The divine powered forms or physical structures). எனவேதான், <u>தமிழ் எழுத்துக்களை நீர் மேல், மண் மேல், மணல் மேல், உப்பின் மேல், பயிரினப் பாகங்களின் மேல், (இலை, காய், பூ, விதை, தண்டு, வேர், ....), உயிரினப் பாகங்களின் மேல் ..... எழுதி உருப்போட்டால் (Enchanting the Sacred verses) அல்லது உச்சாடனம் செய்தால் ...... அருளாற்றல் ஊற்றெடுக்கும்</u>. அப்படி ஊற்றெடுக்கின்ற அருளாற்றலை தனிமனிதர்கள் தங்களின் உடலில் குறிப்பிட்ட அளவு தேக்கி வைத்துக் கொண்டிருப்பார்கள் அல்லது பூசையில் வைக்கப் படும் பொருள்களில் அருளாற்றல் தங்குமாறு செய்வார்கள். அப்பொருள்களையே பிறருக்குத் தேவையான அருட்பாதுகாப்பும் நலமும் வழங்கப் பயன்படுத்துவார்கள்.

இப்படித் தமிழ் எழுத்துக்கள் அருளணுக்களை ஒன்று திரட்டி மனித வாழ்வுக்குப் பயனுள்ளதாகச் செய்யும் அருளாற்றல் உடையனவாக இருக்கின்றன. இதனைக் குருபாரம்பரியம், "...... அருட்கேணிகளைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்கள்; அக்கேணிகளிலிருந்து அருள்நீரை இறைப்பதற்காக வழங்கிய தோண்டிகளே தமிழ் எழுத்துக்கள். அண்டபேரண்டப் பெருவெளிகளிலும், இம்மண்ணுலகிலும் அருளணுக்கள் நிலத்தடி நீர் போல் நிறைந்துள்ளன. இந்தத் தெய்வத் தமிழ் எழுத்துக்களை

அடிப்படையாகக் கொண்டே; இம்மண்ணுலகில் தோன்றும் மனித இனங்களின் ஆற்றலுக்கும், சூழல்களின் வளவாய்ப்புகளுக்கும் ஏற்ப புதிய புதிய வடிவுடைய எழுத்துக்களைப் படைத்தார்கள். எனவே, **பதினெண்சித்தர்கள் படைத்த எழுத்துக்களனைத்துமே அருளாற்றலை வழங்கும் தரமும், திறமும் உடையவையே**...." என்ற வாசகத்தால் குறிக்கின்றது. இதனால் மொழிவெறியோ, ஆதிக்கமோ இல்லாத சமத்துவநிலையே சித்தர் நெறியின் (இந்துமதம்) கொள்கை என்ற பேருண்மை விளங்குகின்றது.

எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் தமிழ்க் கொலைகள் நிகழுவதைத் தடுத்தேயாக வேண்டும். **புதிய எழுத்துக்கள் (சமசுக்கிருத மொழியின் ஷ, ஜ, ஹ, ...) தேவையென்று எண்ணிப் பிறமொழிச் சொற்களின் எழுத்துக்களைத் தமிழில் பயன்படுத்துவது தற்கொலைக்குச் சமமாகும். அது அருளுலகை இருளடையச் செய்து விடும்.** தமிழ்மொழியில் உள்ள வடஆரிய மொழிக் கூறுகளை அகற்றுவதே தமிழர்களை வடஆரிய மாயைகளில் இருந்து விடுவிக்கும் பணியாகும். அறிவுப் பூர்வமான விளக்கங்களை வழங்கித் தமிழ்மொழிச் சொற்களைத் தூய்மைப் படுத்தி, வாய்மைப் படுத்தி, மெய்ம்மைப் படுத்துவதுதான் தமிழர்களின் அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பணியாகும். **தமிழ்மொழியே தமிழினத்தின் உயிர்நாடி. தமிழே பட்டுப் போனதையும் துளிர்க்கச் செய்யும் அரிய மருந்து.** வடஆரியர்கள் தங்களுடைய செல்வாக்கிழந்த சமசுக்கிருத மொழியை எந்நேரமும் புகழ்ந்து கொண்டாடி ஆட்சிபெறச் செய்ய முயற்சிப்பது போல; **ஒவ்வொரு தமிழனும் தன்னுடைய மூச்சையும் பேச்சையும் தமிழ்மொழியைப் புகழ்வதிலும், ஆட்சிமீட்சி பெறச் செய்வதிலும்தான் செலவிட வேண்டும்.** ...... இப்படிப்பட்ட முயற்சிகள்தான் தமிழ்மொழியைச் சிறப்புக்குள்ளாக்கிடும்.

**பதினெண்சித்தர் பீடம், பதினெண்சித்தர் மடம்.**

**//இதன் மூலம்: 26-12-88இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை 42 to 48.//**

# அருளுலகின் அகற்றவியலாக் காரிருள்

## "எல்லாக் கடவுள்களும் தாடி, மீசை, முடி உடையவர்களே"

பல்வேறு காரணங்களால், மூன்றுவது தமிழ்ச் சங்கத்தின் அழிவையும், பாண்டிய வேந்தன் வடஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுங்செழியனின் வீழ்ச்சியையும், மதுரை மாமூதூரின் பேரழிவையும் அடுத்துப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற அமைப்பையும்; இதன் கீழ் நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிருவாகங்களையும் தோற்றுவித்தார்.

இவற்றிற்காக எண்ணற்ற நூல்கள் எழுதிய போதிலும்; பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டுமே எழுதிடும் **'குருபாரம்பரியம்'** (The Religious History), **'இலக்கிய பாரம்பரியம்'** (The Social History; and the History of the Language and the Literature), **'அரச பாரம்பரியம்'** (The Political History) எனும் மூன்றிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் தமக்கு மட்டுமே, *'பொய்யான ஹிந்துமதத்தை'* எதிர்த்துப் போராடும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது பற்றியும்; அதற்காகத் தாம் செய்யும் முயற்சிகள் பற்றியும் மிகத் தெளிவாக ஏராளமான செய்திகளைக் குறித்துள்ளார்.

இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதிதான், 'இளமுறியாக் கண்டம்' (குமரிக் கண்டம்), 'வட இமயமலை', 'வட கங்கை',

‘வட பிறம்மபுத்திரா’, ‘வட யமுனே’, ‘வட சிந்து’, ..... இந்து ஆறு, அருட்பாநகர் (அரப்பா), மோகஞ் சிதரு நகர் (மொகஞ்சதாரோ), தொன்மதுரை, தென்மதுரை, கபாடபுரம், மூன்று கடல் கோள்கள், மூன்று தமிழ்ச் சங்கங்கள், நான்கு உகங்கள் (நான்கு யுகங்கள்), மானுட இனத்தின் வாழ்வு நான்கு யுகத்திற்குரிய நாற்பத்தெட்டு இலட்சம் ஆண்டுகள்; இந்துமதம் தோற்றுவிக்கப் பட்டது கி.மு.43,71,101ஆம் ஆண்டு; பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தது கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே; சமசுகிருதம் என்ற மொழி வடஆரியரின் எழுத்தற்ற பேச்சு மொழியும் தமிழ் எழுத்துக்களும் சேர்ந்து உருவாக்கப் பட்ட ஒன்றேயாகும்; அதுவும் தமிழுக்குச் சமமாக ‘சமம்’ + ‘கிருதம்’ [*கிருதம் = செய்யப் பட்டது, உருவாக்கப் பட்டது* - வடஆரிய மொழி விளக்கம்] = சம + கிருதம் => சமசுக்கிருதம் ... என்பன போன்ற பல அரிய பெரிய நுட்பமிகு வரலாற்றுச் செய்திகளேயெல்லாம் விளக்குகிருர்.

இவருடைய குருபாரம்பரியத்தில், கடவுளேப் பற்றிக் கூறும் ஒரு சுவையான செய்தியை இங்கு குறிக்கிரேம் யாம். [இ.ம.இ.யின் இரண்டாவது தலேவர், சித்தர் காகபுசுண்டர் எனப்படும் சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளே, காக்கா வழியன் பண்ணேயாடி; ‘முடிகணம்’ எனப்படும் முடிகண்ட சோழபுரம், திருச்சி மாவட்டக் கரூர் வட்டம்.] இங்கு பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகத்தைக் குறிக்கின்ரேம் யாம்.

“...... அருளுலகின் அகற்றவியலாக் காரிருளாகத் தாடி, மீசை, தலேமுடி பற்றி அருளுலகக் கண்ணேட்டமும், கருத்தோட்டமும், மெய்யான தத்துவமும் பொதுமக்களால் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதுதான். அருளுலகில் எந்தப் பயிற்சியைச் செய்வதாஞலும் சரி; எத்தகைய முயற்சிகளே மேற்கொள்வதாஞலும் சரி; அவர்கள் **கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டம்**

**தாடி, மீசை, முடி முதலியவைகளை வெட்டாமல் வளர்க்க வேண்டும் என்பதுதான்**. ஆனால், மண்ணின்பம், பெண்ணின்பம், பொன்னின்பம் என்ற மூன்றையும் முழுமையாகத் துறக்கவும், மறக்கவும் துணிவுள்ளவர்கள் மட்டுமே எல்லா முடிகளையும் முழுமையாக மழித்தெடுத்திட வேண்டும். இதுதான் அண்டபேரண்டமாளும் மெய்யான இந்துமதத்தின் அடிப்படையான சட்டதிட்டக் கட்டுப்பாட்டு விதியாகும்.

இதற்குக் காரணம், **உலக மதங்கள் அனைத்திலுமே கடவுள்களாக வழிபடப் படுகிறவர்கள் அனைவருமே தாடி, மீசை, முடியோடுதான் இருக்கிறார்கள். இந்து மதத்துக்கே உரிய மூலவர்கள், முன்னணியினர்கள், .... எனப்படும் ஆதிசிவன், ஆதிமாயோன், ஆதிபிறமண், ஆதிதேவேந்திரன், ஆதி இந்திரன், ஆதிக் குபேரன், ஆதி இயமன், முருகன் (ஒரே முருகன் 32 வயது), ஆதி ஐயனார் ...... முதல் இன்றுவரை தோன்றியுள்ள பல நூறாயிரக் கணக்கான சிவன்களும், மாயோன்களும், ...... தாடி, மீசை, முடியுடன்தான் இருக்கிறார்கள்**.

இப்பேருண்மை புரிந்தால்தான், இந்துமதத்தில் உள்ள ‘குருநிலையோர்’, ‘குருக்கள் நிலையோர்’, ‘குருமார் நிலையோர்’, ‘பூசாறி நிலையோர்’ எனும் நால்வகையினரும் எப்படிப் பயிற்சி, முயற்சி செய்து தேர்ச்சி பெற வேண்டும்; எப்படியெப்படி வாழ்ந்து அருட்பயிர் செய்து வறுமையையும், வெறுமையையும் அகற்ற வேண்டும். ..... என்ற தெய்வீகத் தத்துவங்களும், சித்தாந்தங்களும் விளங்கிடும்! செயலாகிடும்! .... அதன்பிறகுதான், இந்துமதத்தின் ‘பத்தம்’, ‘புத்தம்’, ‘போத்தம்’, ‘முத்தம்’, ‘சீவன்முத்தம்’, ‘சித்தியாந்தம்’ எனும் அறுவகைச் சமயம் செழிக்கும்! செழிக்கும்! செழிக்கும்! பயனுற்றிடும்! பயனுற்றிடும்! பயனுற்றிடும்!

குறிப்பாக இந்துமதத்தில் ஆதிசிவனுக்கும், தென் இமயமலைத் தலைவன் மகள் மலைமகளுக்கும் பிறந்த முருகன் விண்ணுலக மங்கை தெய்வானையையும், மண்ணுலக மங்கை வள்ளியையும்

மணந்து முப்பத்திரண்டாண்டு வயதாகியும் மக்கட்பேறு இல்லாமையால் தனது பதினெண்சித்தர் பீடாதிபதிப் பதவியைத் துறந்து பதினெட்டுப் படைவீடுகளில் அருவுருவ சமாதியானான். [ஆறுபடை வீடுகள் பதினெண்சித்தர்களுக்கு; ஆறுபடை வீடுகள் தேவர்களுக்கு; ஆறுபடை வீடுகள் மானுடர்க்கு] அப்படி முருகன் சமாது ஆகும்போது நீள் முடியும், முறுக்கு மீசையும், குறுந்தாடியும்தான் பெற்றிருந்தான். **எனவே, 'கடவுளாக மாறும் மானுடர் அனைவரும் தாடி, மீசை, முடி வைத்திருந்தேயாக வேண்டுமென்பதுதான் சட்டம்'. அதாவது, எல்லாக் கடவுள்களுமே தாடி, மீசை, முடியுடையவர்களே .......”**

இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்தான், இன்றைக்கு ஓவியங்களிலும், சிற்பங்களிலும் அழகுற வார்க்கப்படும் உலோகச் சிலைகளிலும், நுட்பமாகச் செய்யப்படும் பொம்மைகளிலும் வடிவப் படுத்திக் காட்டப்படும் **கடவுள்களின் வடிவங்கள் பிழையானவை, தவறானவை** என்ற பேருண்மையை விளக்குகிறது. அதாவது, தேவகுமாரனாகப் பிறந்த முருகன் உட்பட அனைவருக்கும் தாடி, மீசை, முடிதான் இருந்தது.

வனவாசம் முடித்து நாடு திரும்பி முடிசூடி அரியணையில் அமர்ந்த இராமபிரான், பாரதப் பெரும்போரை நிகழ்த்தி முடித்த கண்ணபிரான் ஆகிய இருவரும் கூட இறுதிக் காலத்திலும், அவ்வப்போது அருளை வெளிப்படுத்திய காலங்களிலும் தாடி, மீசை, நீள்முடியுடன் இருந்தனர் என்றுதான் குருபாரம்பரியம்; சித்தர் சிவபுராணம், முருக புராணம், மாபுராணம், சித்தர் மாயோன் புராணம், சித்தர் பிறம்ம புராணம், சித்தர் தேவேந்திர புராணம், சித்தர் இந்திர புராணம், சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம், .... முதலிய இலக்கிய பாரம்பரிய நூல்கள் ஆகிய அனைத்தும் கூறுகின்றன.

**//இதன் மூலம்: 1988இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 50.//**

# “எல்லாக் கடவுள்களும் தாடி, மீசை, முடி உடையவர்களே!”

இவற்றால் மண், பெண், பொன் எனும் மூவாசைகளுக்கும் அப்பாற்பட்ட மறவிகளும், துறவிகளும்தான் தாடி, மீசை, தலைமுடி ..... முதலியவற்றைக் குறைத்தலோ! மழித்தலோ செய்யலாம் என்பதும்; இல்லறத்தார் தாடியைக் குறைத்துக் கொள்ளுதல்; அல்லது முழுமையாக அகற்றிக் கொள்ளுதல்; மீசையை விருப்பம் போல் வெட்டித் திருந்திய வடிவமைப்புச் செய்து கொள்ளுதல்; தலைமுடியைப் பிடரி வரை அழகாக வைத்து நறுக்கிக் கொள்ளுதல் அல்லது குறைத்துக் கொள்ளுதல் என்பதும், மற்றபடி **அருளாளர் என்ற நிலையை நாடும், தேடும், அடையும் ..... அனைவரும் தாடி, மீசை, முடி வளர்த்தேயாக வேண்டும்**.

இதுதான் கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தொன்மதுரையில் அமைந்த இம்மண்ணுலகின் முதல் அரசாங்கத்தின் அரசனான ஆதிசிவன்; அரசியல் சட்டப்பூர்வமாக வழங்கிய பதினெண்சித்தர்களின் **சித்தர்நெறியான ‘சீவநெறி’** (சீவநெறி -> சைவநெறி) எனும் **‘இந்துமதத்தின்’** அருளுலக வாழ்வியல் நியதி, நீதி. எனவே, இந்துமதக் கடவுள்களின் மெய்யான வடிவமும், அருளாளர்கள் பெற்றிருக்க வேண்டிய தோற்றமும் இனியாவது இந்துக்களால் உணரப்படல் வேண்டும்.

**இந்து மறுமலர்ச்சி இயக்கப் பாரம்பரியத் தலைவர்**
**சித்தர் காகபுசுண்டர் எனப்படும் சித்தர் காக்கையர்**
**ம.பழனிச்சாமி பிள்ளை,**
**காக்கா வழியன் பண்ணையாடி,**
**‘முடிகணம்’ எனப்படும் முடிகண்ட சோழபுரம்**
**கரூர் வட்டம், திருச்சி மாவட்டம், 10-10-1957**

**//இதன் மூலம்: 1988இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை என் 50.//**

# சனீசுவரக் காயந்திரி மந்தரம், தோத்தரம்

## (ஒன்பது கோள்களின் நாயகன் வழிபாடு)

இன்று பலருக்குப் பிறப்பியல் (சாதகம் = Horoscope) எழுதப்படாத குறையிருக்கின்றது. சிலருக்குத் தங்களின் சாதகம் (ஜாதகம் வடமொழிச் சொல்) சரியானதாக இருக்காது என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்த நிலைகளால் தங்களுக்கு எந்தக் கோள் (கிரகம்) பாதித்திருக்கிறது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள், கவலைப்படுகிறார்கள். இவர்களுக்குப் பயன்படும் வண்ணமே பதினெண்சித்தர்களின் பூசாவிதி நூலில் **"ஒன்பது கோள்களின் நாயகன் வழிபாடு"** என்ற பூசா விதி (மறை, முறை, நெறி, வேதம் .......) வழங்கப்பட்டிருக்கிறது.

இந்து மதத்தில் "மனிதன் கடவுளாகலாம்"; எதுவும், எவரும் .... முயன்றால் ஈசுவர (பட்டம்) நிலையினை எய்தலாம் (ஈசன் = தலைவன் = கடவுள்); பயிற்சியும், முயற்சியும் எத்தகைய சத்தியையும், சித்தியையும், முத்தியையும் வழங்கும் ...... என்ற அரிய, பெரிய, சமத்துவப் பொதுவுடமை சித்தாந்தக் கருத்துக்கள் இருக்கின்றன.

மனிதன் தனக்குக் கோள்களின் பாதிப்புகள் இருப்பதை நீக்கிப் போக்கிக் கொள்ளவும், கோள்களின் (பெயர்ச்சியால்) பாதிப்புகள் வராமல் தடுத்துக் கொள்ளவும் பரிகாரப் பூசைகள் பதினெண் சித்தர்களின் பூசாவிதிகளில் பல உள்ளன. இதேபோல் நாள், மீன், இராசிப் பாதிப்புக்களுக்கும் பரிகாரப் பூசைகள் உள்ளன. அதாவது பதினெண்சித்தர்களின் இந்துமதம், விண்வெளியில் உள்ள நாள்களும், கோள்களும், மீன்களும், இராசிகளும்தான் மண்ணுலகின் பயிரினங்கள், உயிரினங்கள், பருவக் காலங்கள் ....... முதலிய அனைத்தையும்

நேரடியாகக் கண்காணித்து இயக்கி வளர்க்கின்றன. எனவே, உரிய தமிழ்மொழி எழுத்துக்களாலும், சொற்களாலும் ஒலியெழுப்பிப் படையல்களுடன் பூசை செய்தால் விண்வெளிக் கண்காணிப்புச் சத்திகளைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

(**சாதகம்** = மனிதனுக்கு நலமளிக்க, வாழ்வியலோடு இணைந்த பேருண்மைகளை விளக்கவும், அரிய சத்திகளை வழங்கவும் உதவக் கூடிய குறிப்புக்கள்; பெரிய அருளாளர்களின் சாதனைகளை அகத்திலே கொண்டதுதான் சாதகம் - ***குருபாரம்பரிய விளக்கம்***.

பிறப்பியல் = சாதகம்; பதினெண்சித்தர்களின் வானியல் அறிவே இந்தச் சாதகம் எனும் ஞானக்கலை.)

இதற்கு உதவுவதே சனீசுவரப் பூசை. அதாவது ஈசுவரனுக்குச் சமமாக அருளாற்றல் பெற்றவர்களாகச் சனீசுவரர், முனீசுவரர் ........ என்ற சிலரே உள்ளனர். இச்சிலரில் சனீசுவரர் விண்வெளியியல் ஆட்சியிலும், முனீசுவரர் மண்ணுலகியல் ஆட்சியிலும் எத்தகைய மாற்றங்களையும், திருப்பங்களையும் தங்களது விருப்பம் போல் உருவாக்கும் ஆற்றலுடையவர்கள். எனவேதான் "மண்ணுலகக் கடவுள்கள்" (The Gods of the Earthly pleasures). "விண்ணுலகக் கடவுள்கள்" (The Gods of the Heavenly pleasures) என்று இருபெரும் பிரிவுகள் பதினெண்சித்தர்களின் **இந்துமத**த்தில் மிகத் தெளிவாகக் குறிக்கப் படுகின்றன.

**இந்துமத**ப் பூசாவிதிகளில் ஈசுவரப் பூசை என்பதற்குப் பல பூசாவிதிகள் உள்ளன. இவற்றில் சனீசுவரப் பூசை, முனீசுவரப் பூசை, அஞதீசுவரர், ஆதீசுவரர், பாதீசுவரர், மீதீசுவரர், வானீசுவரர், பாதனீசுவரர், பரமேசுவரர், மகேசுவரர் ....... என்று பதினெட்டு (18) ஈசுவரர்களின் பூசா விதிகள் மிகச் சிறப்பாகச் செயலில் உள்ளன, இவற்றில் சனீசுவரரின் பூசாவிதி மிகத் தெளிவாக அனைத்து விதமான நாள், கோள், மீன், இராசிப் பாதிப்புகளுக்கும் பரிகாரமாகச் சொல்லப் படுகின்றது. இதனை ஈசுவரர்களும் செய்வதாகக் குறிப்புள்ளது. - **குருபாரம்பரியம்**

சனீசுவரப் பூசை குருவழியாக, குருவின் வாழ்த்தோடும் துணையோடும் நிகழுதல் விரைந்து பயனளிக்கும் என்று குறிக்கப்படுகின்றது.

சனியின் பாதிப்புள்ளவர்கள் அன்றுடம் மாலையில் எள் விளக்கேற்றி அல்லது மாமிசக் கொழுப்பெண்ணெயில் விளக்கேற்றி சனீசுவரக் காயந்திரி மந்தரம் (48) நாற்பத்தெட்டு முறை கூறிச் சனீசுவரனை வேண்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுதும் சாதாரணமாகச் சனியின் அருளை வேண்டுபவர்களும், மற்ற நாள், கோள், மீன், இராசிப் பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்புகிறவர்களும் கூறவேண்டிய சனீசுவரக் காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் ...... தேவைக்கேற்பக் குருவழி தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது குருவானவர் உரியவருக்கு உரிய காலங்களில் கற்பிக்க வேண்டும் ........

**- குருபாரம்பரியச் சட்டம்.**

## <u>சனீசுவரக் காயந்திரி மந்தரம்</u>

**"ஒன்பதுகோள் நாயகனே! சனீசுவரா! தழைத்தெழு நீ! வாழியவே!**
**சனீசுவரா! பகவானே! அரையா! வித்தைகளின் மகவே!**
**பங்கு வழங்கு ஆதாயம் தீயில் மகிழவே!**
**உன்னோடு மந்தநிலை, அந்திநிலைப் பிறச்சினைகள் அற்றிடட்டும்!**
**காக்கையேறு கருநாக ஈசுவரனே! கவலையகற்றிக் காத்திடுக"**

இந்த ஐந்து வரிகளே குருவாக்கு, குருவாசகம், குருவாக்கியம், குருபாரம்பரியம் எனும் நான்கிலும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இந்த மந்தரத்தால் அருளுலகில் நல்ல செல்வாக்குப் பெறலாம். பொருளுலகத் தொல்லைகளையெல்லாம் போக்கிக் கொள்ளலாம். உலக மானுடர்கள் இந்த ஒலிநயம் கெடாமல் தங்கள், தங்களின்

மொழிகளில் ஓதலாம். இதே பொருள்படத் தங்களது மனந் திறந்த உரைகளை, வாசகங்களைக் கூறி அவரவர் மொழியில் பூசை செய்யலாம். தங்கள் தங்களின் தீமைகளைத் தாங்களே அகற்றி நன்மைகளை விளைவித்துக் கொள்ளலாம்.

இப்படி ஒவ்வொருவரும் தாங்களே முயன்று தங்களுடைய ஆருயிர், ஆவி, ஆன்மா எனும் மூன்றையும் தூய்மைப்படுத்தி, வாய்மைப்படுத்தி உய்வு பெறச் செய்துகொள்ள வழிகாட்டுவதுதான் பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்**. எனவே இடைத்தரகர்களை நியமித்து பூசைகளைச் செய்யும் *ஹிந்துமதம்* பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரின் வேத மதமே ஆகுமென்பதை உணர வேண்டும். அதாவது பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியே **மெய்யான இந்து மதம்**. பிருமணருடைய *ஹிந்து மதம்* பொய்யான இந்து மதமாகும்.

# சனீசுவரத் தோத்தரம்

1. ஏ! ஏ! ஏ! ஏமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
2. வா! வா! வா! வாமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
3. கா! கா! கா! காமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
4. சோ! சோ! சோ! சோமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
5. நீலக்கல்லாய் நிலைத்த அருள்வழங்கு சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
6. எள்ளும் எண்ணையும் எரித்ததுமே எழுந்தருளும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
7. மைக்கறுப்பழகால் வையம் காக்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!

8. மூன்றும் பிறையமர்ந்து முத்திதரு சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
9. முனிவர் இருடி அக்கினி காக்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
10. அருவுருவ இயவுளாகித் தீமைகள் தீர்க்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!
11. பிண்டம் அண்டம் பேரண்டம் அண்டபேரண்டம் காத்திடுக!
12. தேடிடும் செல்வம் பலவும் தேடிவர அருளுக!
13. எமவாதை அச்சமகற்றி நீடித்த ஆயுள் அருளுக!
14. ஒன்பது கோள் நற்றுணையும் உதவியாகிட அருளுக!
15. பன்னிரண்டு இராசிகள் பக்கத் துணையாகிட அருளுக!
16. இருபத்தேழு விண்மீன்கள் தோதாகக் காத்திட அருளுக!
17. அருளூறு பூசைகள் சித்திக்கச் சத்தியருளுக!
18. இருளகற்றுக இன்னல் தவிர்த்திடுக நாமேயாகுக!
19. நாதியாதி ஆதிநாதி நாயகனே! நலமே நல்குக!
20. அச்ச மாச்சரிய ஆச்சரிய வேதனைகளைத் துச்சமாக்கிடுக!
21. ஒன்பது கோள் நாயகனே! உமக்கு வழங்குகிறோம் தோத்தரம்!
22. பயிரின உயிரினங்கள் தழைக்கக் காப்புப் பல பயந்திடுக!
23. சனீசுவரா நீயே சுவையாகுக! சுவையாகுக! சுவையாகுக!
24. சனீசுவரா நீயே சச்சிதானந்த அருட் பெருஞ்சோதி யாகுக!
25. சனீசுவராய நமச்சிவாய பராசத்தி நாராயணா நாமாகுக!
26. சனீசுவராய நாள்கோள் மீன் இராசி சித்திமுத்தி நாமாகுக!
27. சனீசுவராய அருட்பயிரே விளைந்திடுக! விளைந்திடுக! விளைந்திடுக!
28. ஓம் சனீசுவரா! அனைத்தும் பிழைத்திட நல்லாட்சி நிகழ்த்துக!
29. ஓம் சனீசுவரா! அத்தனையையும் காத்திட வல்லாட்சி நிகழ்த்துக!
30. ஓம் சனீசுவரா! எத்துணையையும் பேணிட அருளாட்சி நிகழ்த்துக!

31. ஓம் சனீசுவரா! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!

32. ஓம் சனீசுவரா! தோத்தரமேற்றிடு! தோத்திறமேற்றிடு! தோத்திரமேற்றிடு!

**- குருபாரம்பரியம் வழங்கும் சனீசுவரத் தோத்தரம்.**

அங்கவியல் சாத்திற அடிப்படைகள் முப்பத்திரண்டாவது போல், விண்வெளி உலகின் ஆட்சிக்கு இலக்கியமும் இலக்கணமுமாக, உயிரும் உயிர்மெய்யுமாக, சொல்லும் பொருளுமாக, சத்தியும் சிவமுமாக, இரவும் பகலுமாக உள்ள சனீசுவரன் "முப்பத்திரண்டு தோத்தர வரிகளால்" பூசை செய்யப்படுவதே பதினெண்சித்தர்கள் கண்ட பூசை வழி, பூசா மொழி, பூசா விதி, பூசை முறை, பூசை நெறி, பூசை வேதம் ... ...

*['மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி' என்ற நூலில் குருதேவர் கூடுதலாக அளித்த குறிப்பு.]*

இதை இசையோடு சொல்லலாம்; எப்பொழுது வேண்டுமானாலும், இருக்கும் இடத்தில் இருந்தபடிச் சொல்லலாம்; பாதிப்பு இல்லாதவர்களும் கூறலாம். சொல்லும் போது எள்ளை ஒரு துணியில் முடிந்து நல்லெண்ணெயில் தோய்த்து அகல்விளக்கில் வைத்து எரித்திட வேண்டும். இது எல்லாவிதமான பாதிப்புகளையும் அகற்றும்; எல்லாவிதப் பாதுகாப்புகளும் கிடைக்கும்.

**//இதன் மூலம்: 26-11-1985இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 23//**

# உண்மையான இந்துமதம் ஈன்றெடுத்த தொழுகை முறைகள்

இந்து மதம் இம்மண்ணுலகில் தோன்றி அனுதிக் காலம் 4,85,920 + கிரேதாயுகம் 17,28,080 [பாட வேறுபாடு 17,28,000] + திரேதா யுகம் 12,90,000 [பாட வேறுபாடு 12,96,000] + துவாபர யுகம் 8,64,000 + கலியுகம் 5,085 [கி.பி.1984இல்] = 43,73,085 நாற்பத்துமூன்று நூறுயிரத்து எழுபத்து மூவாயிரத்து எண்பத்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு முன் இந்த இந்து மதம் விண்வெளியிலுள்ள அண்டங்களில் கணக்கற்ற கோடியாண்டுகளாக இருந்து வருகிறது. பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும்தான் தங்களுடைய விண்வெளி மதமான இந்து மதத்தை தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியில் இம்மண்ணுலகுக்கு வழங்கினுர்கள்.

இந்த இந்து மதம் மறைகள் நான்கு + முறைகள் நான்கு + நெறிகள் நான்கு + வேதங்கள் நான்கு என்று 16 வகையான செல்வ வளங்களையுடையது. இவற்றைத்தான் திருமணங்களில் கூறப்படும் "பதினுறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்ற சொற்ருெடர் விளக்குகிறது.

**முறைகள் நான்கு:** 1. தொழுகை முறை, 2. அழுகை முறை, 3. எள்ளல் முறை, 4. ஏசல் முறை; இப்படி இறைவனை வழிபடும் முறைகள் என்று இந்து மதம் அறிவிக்கும் நான்கு வகையான முறைகளிலும்; முதல் நிலையில் இருக்கின்ற முறைதான் தொழுகை

முறை. ஆனால், இம்முறை இன்றைய இந்து மதத்தில் வழக்கில் இல்லை.

இந்து மதம் தனது நான்கு வகையான முறைகளில் முதல் முறையான தொழுகை முறையை ஏன் இழந்தது? எப்படி இழந்தது? எப்பொழுது இழந்தது? எதற்காக இழந்தது? எவரால் இழந்தது? எவ்வெவ்வாறு இழந்தது? ... என்ற வினாக்களுக்கு முறையான, முழுமையான, நிறைவான விடை கண்டுபிடிக்கப் பட்டால்தான் இந்து மதம் மறுமலர்ச்சி பெறும்; புதுவாழ்வு பெறும்; புரட்சிக்குரிய செழுச்சிகளைப் பெற்று, எழுச்சிமிகு கிளர்ச்சிகளை வளர்ச்சி பெறச் செய்யும் என்று முடிவு கட்டி விஞ்ஞானச் சூழல்களிலும், பகுத்தறிவுப் போக்குகளிலும், ஆக்கப் பூர்வமான நோக்கங்களிலும் ஆராய்ச்சிகளை நிகழ்த்தி வருபவரே இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஆவார்கள்.

இவரது அரிய, கூரிய, சீரிய, நேரிய, பெரிய முயற்சிகளை வைத்துத்தான் இவரை **இந்துமதத் தந்தை** என்று உலக அருளாளர்கள் போற்றுகிறார்கள். இவர் நூலாகவும், கட்டுரையாகவும், அஞ்சலாகவும் எழுதிக் குவித்திருப்பவை அச்சேறிடத் தமிழ் இனமும், தமிழ் மொழியும், தமிழ் நாடும் விடுதலை பெற்றிடல் வேண்டும். அக்காலமும் இக்காலம் என்பதால்; தமிழ் உணர்வும், இனப் பற்றும், நாட்டு உரிமையுணர்வும் மிகுந்த தன்மானத் தமிழர்கள் இவரது ஆராய்ச்சிப் பணியில் பங்கு பெறட்டும் என்பதற்காகவே இச்சிறு கட்டுரை எழுதப் படுகின்றது. ஏனெனில், தனிமரம் தோப்பாகாது என்பதை உணர்ந்து இவர் பல நூறாயிரக் கணக்கான அருளாளர்களை உருவாக்கி வந்துள்ளார். அதைப்போல் ஆராய்ச்சி உலகில் பல ஆராய்ச்சியாளர்கள் தோன்ற வேண்டும் என்பது எங்களைப் போன்ற உண்மையான இந்துமத வாதிகளின் விருப்பம்.

## <u>குறிப்பிலிருந்து சில:-</u>

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்ற எளிய வழக்காற்றுக் கருத்துச் சொற்றொடர் மூலம் பதினெண்சித்தர்கள் ஆதியில் படைத்திட்ட 48 வகையான வழிபாட்டு நிலையங்களில் <u>ஆலயம் என்ற ஒன்றில் தொழுகை முறை கையாளப்பட்டது</u> என்ற பேருண்மை தெரிய வருகிறது.

‘தருவாக்கு’ என்னும் நூலில் இருந்து

1. **அழுகை இழுகை உழுகை எழுகை**
   **தொழுகை விழுகை ஆறும்**
2. **ஆண்டவர் இறைவர் ஈசர் எல்லா**
   **கடவுள் தெய்வம் ஆறும்**
3. **முறை முறை உணர்த்திச்**
   **சித்தியெல்லாம் சடுதியில்**
4. **நிறை நிறை தந்தருளுமே.**

என்று மிகத் தெளிவான குறிப்பு ஒன்று தொழுகை முறை பற்றிக் கூறுகின்றது.

இவையெல்லாம் கருவாக்கு, கருவாசகம், குருவாக்கு, குருவாசகம், தருவாக்கு, தருவாசகம், திருவாக்கு, திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாசகம், ... குருபாரம்பரியம் முதலிய பல நூல்களிலும் தொழுகை முறை பற்றிய குறிப்புக்கள் வந்திருக்கின்றன.

அக்குறிப்புச் சொற்றொடர்களில் சிலவற்றை அடிப்படையாகக் காட்டுகிறோம் இங்கு. இவற்றை அடிப்படையாகக் கொண்டு, தமிழின் வளர்ச்சிக்கும், கிளர்ச்சி மிகு விழிச்சிக்கும், செழுச்சிமிகு எழுச்சிக்கும் பாடுபடுபவர் பாடுபடலாம்.

தொழுகை முறைகள் ஆறு,
தொழுகைக் காலம் ஆறு,

தொழுகை நாயகங்கள் ஆறு,
தொழுகை மறைகள் ஆறு,
தொழுகை இடங்கள் ஆறு,
தொழுகை நெறிகள் ஆறு,
தொழுகை வேதங்கள் ஆறு,
தொழுகைச் சித்தங்கள் ஆறு,
தொழுகை ஓதங்கள் ஆறு,
தொழுகைப் போதங்கள் ஆறு,
தொழுகை மோதங்கள் ஆறு,
தொழுகைத் தத்துக்கள் ஆறு,
தொழுகைத் தத்துவங்கள் ஆறு,
தொழுகை அத்துக்கள் ஆறு,
தொழுகை எத்துக்கள் ஆறு,
தொழுகை ஏந்துகள் ஆறு,
தொழுகை உந்துகள் ஆறு,
தொழுகை அத்திறங்கள் ஆறு,
தொழுகைச் சாத்திறங்கள் ஆறு,
தொழுகைச் சூத்திறங்கள் ஆறு,
தொழுகைத் தோத்திறங்கள் ஆறு,
தொழுகை நேத்திறங்கள் ஆறு,
தொழுகை மீமாம்சைகள் ஆறு,
தொழுகை ஆகமங்கள் ஆறு,
தொழுகை ஆரணங்கள் ஆறு,
தொழுகைப் பத்திகள் ஆறு,
தொழுகைச் சத்திகள் ஆறு,
தொழுகைச் சித்திகள் ஆறு,
தொழுகை முத்திகள் ஆறு,
தொழுகைப் பூசாறிகள் ஆறு,
தொழுகைக் குருக்கள்கள் ஆறு,
தொழுகைப் பண்டாரங்கள் ஆறு,
தொழுகை ஓதுவார்கள் ஆறு,

தொழுகை அருளாளிகள் ஆறு,
தொழுகை மருளாளிகள் ஆறு,
தொழுகை அகச் சுத்திகள் ஆறு,
தொழுகைப் புறச் சுத்திகள் ஆறு,
தொழுகைப் பத்தர்கள் ஆறு,
தொழுகைப் போத்தர்கள் ஆறு,
தொழுகைப் புத்தர்கள் ஆறு,
தொழுகை முத்தர்கள் ஆறு,
தொழுகைச் சித்தியாளர்கள் ஆறு,
தொழுகைத் தூதர்கள் ஆறு,
தொழுகைக் கருவறை விதிகள் ஆறு,
தொழுகை உருவறை விதிகள் ஆறு,
தொழுகை வெருவறை விதிகள் ஆறு,
தொழுகை மரபுகள் ஆறு,
தொழுகை ஒழுகலாறுகள் ஆறு.

**இப்படிக்கு**

**குருதேவர் ஆசிரியர் குழு**

**இ.ம.இ.; க.வ.க.; அ.வி.தி.; உ.அ.தி.ச.; அ.ஆ.க.;- முதலியன.**

**<u>ஆதாரம்:</u>** தலைமைப் பொறுப்பாளர், தலைமைப் பணியாளர்.

**//இதன் மூலம்: 26-5-1984இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 5//**

**<u>பின்குறிப்பு:-</u>**

இ.ம.இ. = இந்து மறுமலர்ச்சி இயக்கம்
க.வ.க. = கடவுளை வழிபடுவோர் கழகம்
அ.வி.தி. = அருட்பணி விரிவாக்கத் திட்டம்
உ.அ.தி.ச. = உலக அருளாளர் திருச் சபை
அ.ஆ.க. = அருளுலக ஆர்வலர் கழகம்

# “ஓதுதலும் ஓதுவித்தலும்”

# தொழுகை முறை விளக்கம்

(i) தொழுகை முறை மூலம் 1. மண்ணவர் 2. விண்ணவர் 3. வானவர் 4. ஆகாயத்தவர் 5. பிண்டத்தவர் 6. அண்டத்தவர் 7. பேரண்டத்தவர் 8. அண்ட பேரண்டத்தவர் எனப்படும் எட்டு நாட்டவரும் பூசைக்கு அழைக்கப்படுவர்.

(ii) பதினெண்சித்தர் மரபுப்படி பதினெண்சித்தர்களும், இவர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும், விந்துவழி வாரிசுகளும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் .... இருக்குமிடத்துக்கு அனைவரையும் அழைத்து உருக்கமுடன் பூசை செய்திடுவார்கள்.

அதாவது குருபாரம்பரியத்தில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளின் அணுத்திரள் கூட்டத்தின் ஈட்டத்தால் உருவான அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள் நிலைத்தும், அலைபோல் அலைந்தும் அருளுலக இயக்கங்களை நிகழ்த்துகின்றன. இந்த இயக்கங்களின் ஆட்சி நாயகங்களான தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மையப்பன்கள் ... அழைத்துப் பூசை செய்யப்படும் மறைகளும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும் ... எண்ணற்று வழங்கப்பட்டுள்ள மதமே **‘சித்தர்நெறியான சீவநெறி’ எனப்படும் இந்துமதம்** ... என்ற வாசகங்கள் மேற்படிக் கருத்தை விளக்குகின்றன.

(iii) 1. ***‘தனிமனிதத் தொழுகை முறை’***;

2. தன் குடும்பத்தார், உறவினர் (குருதித் தொடர்புடைய சொந்தக்காரரர்) முதலியவருடன் நிகழ்த்தும் ***‘ஒரு குருதியார் தொழுகை முறை’***,

3. உற்ருர் ஊரார்; நண்பர், தோழர்; அன்னியர் ... முதலானவர்களுடன் கூடி நிகழ்த்தும் ***'பொதுத்தொழுகை முறை'*** என்று மூன்று வகையான தொழுகை முறைகள் உள்ளன.

(iv) தொழுகை முறையைப் பின்பற்றுபவர்கள் ஒருநாளைக்கு ஒருமுறை தொழுவது என்ற நியதி முதல் ஒரே நாளில் ஆறுமுறை தொழுவது என்ற நியதி வரை பின்பற்றலாம். இது அவரவரின் விருப்பாற்றலுக்கும், வசதி வாய்ப்புக்களுக்கும், பத்திப் பக்குவமுறைக்கும் ஏற்ப வேறுபட்டிடும்.

மேலும் 1. நால்வகை ஆச்சாரியப் பீடாதிபதிகளும், 2. எண்வகை ஆச்சாரியார்களும், 3. பதின்மூன்று வகைக் கருவழி ஆச்சாரியார்களும், 4. பதின்மூன்று வகைக் குருவழி ஆச்சாரியார்களும், 5. நாற்பத்தெட்டுப் பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும் ஆக மொத்தம் ஐந்து வகை ஆச்சாரியார்களும் அருளுலக ஆட்சியின் பெருங்குழுவினர் என்று சிறப்பிக்கப் படுகின்றனர். இவர்களின் நேரடி வழிகாட்டலால் எவரெவர் எத்தனை முறை தொழுகை செய்ய வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதுதான் தொழுகை முறையின் செயல்நிலை விளக்கம்.

1. 'தனிமனிதத் தொழுகை முறை'தான் **'ஓங்கு முறைத் தொழுகை முறை'** என்றும்;

2. 'ஒரு குருதியார் தொழுகை முறை'தான் **'தாங்கு முறை அல்லது நாங்கு முறைத் தொழுகை முறை'** என்றும்;

3. 'பொதுத் தொழுகை முறை'தான் **'பாங்கு முறை அல்லது வாங்கு முறை தொழுகை முறை'** என்றும்;

மூன்று வகைத் தொழுகை முறைகள் தெளிவாக வகுக்கப் பட்டிருப்பதுதான் பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்**.

இந்தத் தொழுகை முறையைப் புரிந்து, விரும்பி, ஏற்றுக் கொள்ள முடியாமலிருப்பதுதான் பிறமண்ணினரான பிருமணரின் வடஆரிய வேதமதக் கலப்பால் பிறந்த *பொய்யான ஹிந்துமதம்*.

**குறிப்பு**:- தொழுகை முறைப் பூசாமொழி வாசகங்களை வடஆரிய வேதமத மொழியான சமசுக்கிருத மொழியில் ஓத முடியவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அதனால்தான் அது வடஆரியரால் அழித்தொழிக்கப் பட்டது.

**வழங்குபவர்:** காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை, இ.ம.இ.யின் 2வது பாரம்பரியத் தலைவர்.

**//இதன் மூலம்: 1988இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 51//**

# குருபாரம்பரிய வாசகங்கள்

(1) "அருளுலகப் பாதுகாப்புக்களையும், சத்தி சித்தி முத்திகளையும் வேண்டுபவர்கள் கிணற்று நீராக இருக்கின்ற குருதேவரின் அருளை; முயற்சி என்கின்ற நெடுங்கயிறையும், முழுமையான நம்பிக்கை மிக்க குருபத்தி எனும் தோண்டியையும் பயன்படுத்தித்தான் இறைத்து; நீராடியும், தாகம் தீர்த்தும், உணவு சமைத்தும், புறத் தூய்மைகளைச் செய்தும் வாழ்ந்திடல் வேண்டும்."

(2) "அருள் பேரொளியாக வழங்கப் பட்டாலும், கண்களை இறுக மூடிக் கொள்ளும் இருண்ட நெஞ்சங்களை உடையவர்களை ஏதும் செய்ய இயலாது."

(3) "ஒவ்வொரு மனிதனும் தனியாகப் பிறந்து தனியாகவே இறக்கிறான். அவரவரை அவரவரின் ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை, நாள், கோள், மீன் பாதிப்புக்கள் ...... முதலியவைகள்தான் ஆட்சி செய்கின்றனவே தவிர; பெற்றோர், துணைவன் அல்லது துணைவி, மக்கள், உடன்பிறந்தார் முதலியோர் ஆட்சி செய்யவில்லை. ஆனால், குருதேவர் மூலமாக எதையும் எப்படியும் விருப்பப்படி

மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஏனெனில், குருவே எல்லாம். அனைத்தும் குருவழியே முளைத்துக் கிளைத்துச் செழித்துப் பயன் நல்கிட வேண்டும். அனைத்துக்கும் குருவே கருவாக, தருவாக, திருவாக இருக்கிறார். குருவே எல்லோர்க்கும் எவர்க்கும் வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருந்திட முடியும். குருவழிப் பத்தியே அனைத்து வகையான சத்தி, சித்தி, முத்திகளையும் பெற்றுத் தரும். குருவோடு இரண்டறக் கலத்தலே பிறவாமையையும், இறவாமையையும் தரும். குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர் என்ற நிலையை அடைபவரே மும்மலங்களையும், மும்மாயைகளையும், முக்கன்மங்களையும் வென்ற நிர்வாண நிலையை அடைய முடியும். குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் அருளப் பெற்றவர்களே அருளுலகப் பொருளுலக இருளகற்றி அருட்பெருஞ்சோதி வடிவதனைப் பெற்றிட முடியும்."

(4) "எவனொருவன் தன்னை முழுமையாகக் குருவுக்குக் காணிக்கையாக்கிக் குருதேவரை முழுமையாகப் பத்தி செய்து வாழுகின்றானோ; அவனுக்குள் குருதேவர் வாழ ஆரம்பித்திடுவார். அதன்பிறகு, அவன் குருதேவராகவே தனது சொல்லிலும், செயலிலும் வாழ்ந்திடுபவன் ஆகிறான். அப்படியல்லாமல், உதட்டளவில் 'குருதேவருக்குள் நான், எனக்குள் குருதேவர்' என்று திரிபவன் எந்த நொடியிலும் எதிர்பாராமல் மாபெரும் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் பெற்றுக் குருத் துரோகியாகவும், குரு விரோதியாகவும் அறிமுகப் பட்டிட நேரிடும். எனவே, இந்துமத வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், ஆட்சிமாட்சிக்காகவும் உழைப்பவனே சிறந்த அருளாளனாகத் தேர்ந்திடுவான்" என்பதுதான் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் இந்துமத அருளுலகப் பயிற்சியாளர்களுக்கு விடுத்துக் கொள்ளும் அறிவுரை.

(5) "கனவுகளையும், கற்பனைகளையும் வளர்த்துக் கொள்பவன் காலமெல்லாம் கடவுளைக் கைகூப்பித் தொழுதாலும், கண்ணீர் மல்கிக் கதறி வழிபட்டாலும், அனைத்துக் கடமைகளையும் உதறி

விட்டுக் கடவுள் பணிக்கே கை கட்டியும், கை நீட்டியும் செயல்பட்டாலும் நிறைவையும், நிம்மதியையும் பெறுதல் அரிது.”

(6) “எம்மால் உருவாக்கப் பட்டவர்களே! நீங்கள் இளைஞர்கள் என்றோ, முதியவர் என்றோ, சிறுவர் என்றோ, ஆண் என்றோ, பெண் என்றோ எண்ணாமல் நமது தாயகத்தின் நீடுதுயில் நீங்கிடப் பாடிடும் பல்வேறு வகைப் பறவைகளாக மாறி நாடெங்கும் பறந்து செல்லுங்கள். நமது பத்தி நெறி வரலாறு பற்றிப் பாடுங்கள்; நமது சத்தி நெறி பற்றி விளக்குங்கள்; நமது சித்தர் நெறியின் அருமை பெருமைகளை அறிவிப்புச் செய்யுங்கள். எல்லோரையும் நல்லவராக்குங்கள். முடிந்தவரை பொல்லாதவரை அழிக்கப் போதுமான வல்லவர்களை உருவாக்குங்கள். இனிப் போரின்றிச் சமாதானமில்லை; இனி அழிவின்றிச் செழிப்பில்லை; இனி பாடிவீடும், பாசறையும் அமைத்துப் படை நடத்திச் செயல்படாமல்; நம் பகைவர்கள் நம்மை விட்டுப் போக மாட்டார்கள். இனிமேலாவது விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சியாலும் பகைவர்களை அடியோடு அழிக்க முயற்சிகள் செய்தால்தான்; அவர்கள் விடிவதற்கு முன்னே சொல்லாமல் நம் தாயகத்தை விட்டு ஓடிட முடிவு எடுப்பார்கள். நமது வழிபாட்டு நிலையங்களிலே முரசு முழங்கட்டும்; பறை ஒலிக்கட்டும்; மணியோசைகள் எங்கும் எதிரொலிக்கட்டும்; இவற்றால், நமது மொழி இன மதப் பண்பாட்டுப் பகைவர்கள் இடியோசை கேட்ட நாகம் போல் அரண்டு, மிரண்டு, மாண்டு, மடிவார்கள். அப்பொழுதாவது நமது தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் அருகுபோல் முளைக்கட்டும். ஆல் போல் தழைத்து நிலைக்கட்டும்.

**- அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் வாசகம்**

“இருள்சேர் உலகின் இன்னல்கள் அகற்றி
அருள்சேர் உலகடைத லரிது”

**- குருபாரம்பரிய குறட்பா.**

**//இதன் மூலம்: 1988இல் வெளியிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 50//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** **தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

* **ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

**அண்டத்தை விண்டுரைக்கும் ஐந்திறம் (பஞ்சாங்கம்) உண்டாக்கியவர் சித்தர்.**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் தலைசிறந்த சிந்தனையாளர்; எதையும் நடுநிலையிலிருந்து ஆராயும் பகுத்தறிவாளர்; தன் வழ்நாளில் எந்த ஒரு நொடிப்பொழுதையும் வீணாக்காமல் படிப்பதிலேயே செலவிட்டிட்ட பெரிய படிப்பாளி; உலகைப் பலமுறை சுற்றிப் பார்த்திட்டவர்; ...

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com